**19.03.2024 அ.வ.எண்.106/2007 வா.சா.1, விவேகானந்தன் த/பெ. கிருஷ்ணன்**

**குறுக்கு விசாரணை**

எனது தந்தை பணி ஓய்வு பெற்றபோது அவரது மாத சம்பளம் ரூ-2,500/- இருக்கும். நான் இரயில்வேயில் டெக்னிஷியனாக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். 1982-ல் பணியில் சேர்ந்து 2020 -ல் பணி ஓய்வு பெற்றேன். பணியில் சேர்ந்தபோது எனது மாத சம்பளம் ரூ-900/-. பணி நிறைவு பெற்றபோது ரூ-58,000/- ஆகும். நிகரமாக ரூ-32,000/- பெற்றேன். எனது வருமானத்தை கொண்டு என் தந்தை பெயரில் சொத்து கிரயம் பெற்றது 1997-ம் ஆண்டு வந்தவாசியில் இராஜிவ் காந்தி நகரில் வீட்டு மனை புல எண்.249/1 ஆகும். அந்த சொத்தை ரூ-3,000/- ற்கு கிரயம் வாங்கினேன். அந்த கிரய ஆவணத்தில் நான் கையொப்பம் ஏதும் இடவில்லை. தாழம்பள்ளம் பட்டா எண்.73-ல் 87-1/2 செண்ட் புஞ்சை நிலத்தையும், வீட்டு மனை நத்தம் புல எண்.163-ல் வீட்டுமனையும் என் தந்தை பெயரில் கிரயம் பெற்றேன். அதற்காக ரூ-80,000/- கொடுத்தேன். அந்த கிரய ஆவணத்திலும் நான் கையொப்பம் ஏதும் இடவில்லை. என் தந்தைக்கு பூர்வீக சொத்து ஏதுமில்லை. அவர் சுயமாக சம்பாரித்த சொத்துக்கள் தான் இருந்தது. என் தந்தை மொத்தம் இரண்டு உயில் எழுதினார். வந்தவாசி வீட்டு மனைக்கு தனியாக ஒரு உயில் எழுதினார். அந்த இரண்டாவது உயிலை எனது மகன் பெயருக்கு எழுதினார். அந்த உயில் பற்றிய விவரம் எனக்கு தெரியும். அந்த உயிலை எழுதியவர் என் தந்தையின் நண்பராவார். அவர் பெயர் எனக்கு தெரியாது. உயிலை எழுதியவர் உயிலில் கையொப்பம் இடவில்லை. என் தந்தை உயிருடன் இருந்தவரை அவரை பார்க்க நான் பெங்களூரில் இருந்து மாதத்திற்கு 2 அல்லது 3 முறை வந்து செல்வேன். வழக்கு சொத்தில் ஆள் வைத்து விவசாயம் செய்கிறேன். எனது சொத்துகளில் கேழ்வரகு, நெல் மற்றும் யூகலிப்டஸ் மரம் ஆகியவை பயிரிட்டேன். நெல் 2 ஏக்கர் 40 செண்டிலும், கேழ்வரகு 4 ஏக்கரிலும் பயிரிட்டேன். இவை சளுக்கை கிராமத்திலுள்ளன. தாழம்பள்ளம் கிராமத்தில் 87 செண்டில் யூகலிப்டஸ் மரம் பயிரிட்டேன் அது தற்போதும் உள்ளது. அந்த சொத்தின் புல எண்.32/பி2 ஆகும். ஆணைக்குட்டி என்பவர் எனக்காக விவசாயத்தை பார்த்துக்கொள்கிறார். தாழம்பள்ளம் கிராமத்திலுள்ள சொத்தை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என கேட்டால் சேர்த்துள்ளேன். எனது தாய்வழி பாட்டனார் பெயர் கோவிந்தராஜ். அவரது சொத்துக்கள் என் தாயாருக்கு கிடைத்து பின்னிட்டு அவற்றை என் தாயார் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார் என்பது சரிதான். என் மகனுக்கு உயில்படி கிடைத்த வீட்டு மனையை அவர் என் மனைவிக்கு தானம் கொடுத்துவிட்டார் என் மகன் மருத்துவராக உள்ளதால் அவரால் கவனிக்க முடியாது என்று என் மனைவி பெயருக்கு 2004-ம் ஆண்டில் தானம் கொடுத்தார். என் மகன் எழுதிக்கொடுத்த தான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே, அ.வ.எண்.131/2004 என்ற வழக்கை பிரதிவாதிக்கு எதிராகவும் வேறு சிலருக்கு எதிராகவும் தாக்கல் செய்து விளம்புகை மற்றும உறுத்து கட்டளை கோரியிருந்தேன் என்பது சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்பது சரிதான். அந்த வழக்கு விவரங்களை இந்த வழக்கில் சொல்லவில்லை என்பது சரிதான்.

என் மகன் பெயரில் உள்ள உயில் எங்களால் உருவாக்கப்பட்டது என்பது சரியல்ல. வழக்கு சொத்துகளில் 1/3 பாகம் பிரதிவாதிக்கு பாத்தியமானது என்றும் அந்த வகையில் அவரும் கூட்டு அனுபவத்தில் உள்ளார் என்றும் சொன்னால் அது சரியல்ல.